**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.843/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அடைக்கலம்** | Caste | : |
| Father 's Name | : **தண்டக்ககாரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 1, 2, 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**11.06.2025**
**முதல் விசாரணை**

நான் நல்லூர் வாகைக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 3 பேரையும் எனக்கு தெரியும். மற்றொரு எதிரான காட்டுராஜாவையும் எனக்கு தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. கடந்த 21.04.2021 அன்று இரவு 8.10 மணியளவில் நான் நல்லூர் வயலில் இருந்து தண்ணீர் பாய்த்துவிட்டு எனது வீட்டிற்கு திரும்பி வந்துகொண்டிருந்த போது அங்கு ரோட்டின் மீது ஏறும் இடத்தில் பாதையில் உட்கார்ந்த எதிரிகள் 4 பேரும் மது அருந்திக்கொண்டிருந்தார்கள். அவர்களை பார்த்து நான் கொஞ்சம் ஓரமாக உட்காருங்கள் மற்றும் பாதை மீது மதுஅருந்திய கண்ணாடி பாட்டில்களை போட்டுவிடுகிறார்கள். அது காலில் குத்தி காயம் ஏற்பட்டு விடுகிறது. எனவே ஓரமாக உட்கார்ந்து குடியுங்கள் என சொன்னதற்கு எதிரிகள் 4 பேரும் சேர்ந்து என்னை தேவிடியா மகனே என என்னை அசிங்கமாக பேசி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி என்னை கீழே தள்ளி விட்டார்கள். கம்பாலும் கட்டையாலும் எதிரிகள் என்னை உடம்பில் அடித்தார்கள். அவர்கள் அடித்ததில் எனக்கு தலையிலும் உடம்பிலும் காயம் ஏற்பட்டது. இடது கை முறிந்துவிட்டது. எனதுஇருசக்கர வாகனமான TN 58

AA 9500 TVS Excel என்ற இருசக்கர வாகனத்தின் சாவியையும் எனது செல்போனையும் பிடுங்கிகொண்டு என்னை கீழே தள்ளிவிட்டார்கள். என்னை கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி கழுத்தில் இருந்து லேசாக இரத்தம் வந்ததும் எதிரிகள் ஓடி விட்டார்கள். இருசக்கர வாகனத்தின் சாவியையும் செல்போனையும் கீழே போட்டுவிட்டார்கள். நான் கத்திய சத்தம் கேட்டு எனது மனைவி மங்கம்மாளும் எனது மைத்துனர் திருமாலும் வந்து என்னை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துசென்றார்கள். அங்கு நான் 11 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருக்கும் போது பெருங்குடி போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3வது எதிரியை பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். **3 வது எதிரியை அடையாளம் காட்டவேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**